# வட இலங்கையில் இராமாயணம் சார்ந்த சுற்றுலாவுக்கான இடங்கள் – கொடிகாமம் இராமாவில் பிரதேசத்தை சிறப்பாகக் கொண்டதோர் ஆய்வு

**பிரபாகர், நி., புஸ்பரட்ணம், ப.**
வரலாற்றுத்துறை (கலாசார சுற்றுலா), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
pirapakar1995@gmail.com

*உலகில் வளர்ச்சி கண்ட பெருந்துறையாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. சுற்றுலா மூலமாக நாட்டிற்கு அதிக வருமானம் கிடைப்பதனால் அத்துறையில் தொழில் வாய்ப்புகளும் பெருகி வருகின்றன. இவ்வாறு காலத்திற்கு ஏற்ப வளர்ந்து நிற்கும் சுற்றுலாத் துறையை மையமாகக் கொண்டு ஆன்மீக சுற்றுலா வளர்ச்சி கண்டுள்ளது. மக்கள் தற்காலத்தில் இராமாயணத்துடன் தொடர்புபட்ட சுற்றுலா மையங்களை பார்வையிடு வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இராமாயணத்துடன் தொடர்புடைய இடங்கள், விழாக்கள், கலைகள், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை கண்டு களிப்பதற்காக இராமா யணச் சுற்றுலா மேற்கொள்ளப்படுகின்றது. வால்மீகியால் பாடப்பட்ட இராமா யணத்திற்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இதனால் இராமாயணத்துடன் தொடர்புபட்டதாக தென்னிலங்கையில் சீதை அம்மன் கோயில், இராவண எல்ல போன்ற பல இடங்கள் இருப்பது போல் வட இலங்கையிலும் இராமர் பாலம், தள்ளாடி, வில்லூன்றி, இராமாவில், நிலாவரை என பல இடங்கள் காணப்படுகின்றன. வடஇலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு வாழ்வியலில், கற்பு, ஒழுக்கம், சடங்கு, சமயம் மற்றும் இலக்கியம் என்பவற்றில் இராமாயணப் பண்பாடு இணைந்துள்ளது. அத்தோடு இராமாயணத்துடன் தொடர்புபட்ட ஐதீகக் கதைகள் கொண்ட பல மையங்கள் இங்கு காணப்படுகின்றன. எனினும் ஐதீகக் கதைகளுடன் தொடர்புடைய மையங்கள் மற்றும் இராமாயணப் பண்பாடுகள் என்பன முறையான ஆவணப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. அத்துடன் இம்மையங்கள் ஆன்மீக சுற்றுலா நோக்கில் ஆராயப்பட்டி ருக்கவில்லை என்பது இவ்வாய்வு எதிர்நோக்கும் பிரச்சினையாகும். எனவே இவ்வாய் வானது இராமாவில்ப் பிரதேசத்திற்கும் இராமாயணத்திற்கும் உள்ள தொடர்பு பற்றிய ஐதீகக் கதைகள் மற்றும் வட இலங்கையில் உள்ள ஏனைய இராமாயணம் தொடர்பான மையங்களை இனங்கண்டு ஆவணப்படுத்தல் மற்றும் அம்மையங்களினை இராமாயணச் சுற்றுலா மையங்களாக கொண்டு வருவதற்குரிய தந்திரோபாயத் திட்டங்களினூடாக வெளிப்படுத்தி இம்மையங்களை இராமாயண சுற்றுலா மையங்களாக கொண்டு வருதலே ஆய்வின் நோக்கமாக அமைகிறது. இவ்வாய்வு நோக்கங்கங்களினை நிறைவு செய்வதன் பொருட்டு ஆய்வுக்கான முதன்நிலை தரவுகள் களஆய்வு மற்றும் நேர்காணல்கள் அடிப்படையில் திரட்டப்பட்டன. அத்துடன் இரண்டாம் நிலை தரவுகள் இராமாயணம் மற்றும் இராமாயணத்தினை அடிப்படையாக கொண்டெழுந்த நூல்கள், ஆய்வு கட்டுரைகள், சஞ்சிகைகள் என்பவற்றின் ஊடாக திரப்பட்டுள்ளன. முதன்நிலைத் தரவுகளுடாக திரட்டப்பட்ட விடயங்களை, இரண்டாம் நிலை தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது இவ்வாய்வினூடாக இராமாவில், சரசாலை, மயிலன் கூடல்,*